# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**இலங்கை மின்சார சபை அதிகாரிகளுக்கான ஆளுமைவிருத்தி செயலமர்வு**

இலங்கை மின்சார சபையின் 30 பேரடங்கிய பேராளர்கள் சூரியக் கல மின்சக்தி துறை தொடர்பான விசேட பயிற்சி மற்றும் ஆளுமை விருத்தி செயலமர்வில் பங்கேற்பதற்காக 2026 மார்ச் 09-21 வரை இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

2. 2025 ஏப்ரலில் இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கை அதிகாரிகளுக்கான மேம்பட்ட ஆளுமை விருத்தி செயல்திட்டத்துக்காக 700 தனிப்பயனாக்கப்பட்ட ஆசனங்களை வருடாந்தம் ஒதுக்குவதாக அறிவித்த செயல்திட்டத்தின் அங்கமாக இந்நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

3. இந்த இருவாரகால நிகழ்ச்சித்திட்டம் நொய்டாவில் உள்ள NTPC School of Business இல் இந்திய அரசாங்கத்தால் நடத்தப்பட்டிருந்தது. பி.வி தொழில் நுட்பங்கள், ஆற்றல் சேமிப்பு முறைமைகள், மின்கட்டமைப்பு ஒருங்கிணைப்பு, செயல்திட்ட அமுலாக்கம் மற்றும் செயல்திறன் கண்காணிப்பு உள்ளிட்ட சூரியக்கல மின்சக்தி துறையின் முக்கிய அம்சங்கள் குறித்த நடைமுறை மற்றும் சமகாலப் புரிதல்களை இலங்கை மின்சார சபை பொறியியலாளர்களுக்கு வழங்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

4. அத்துடன் அனல், எரிவாயு மற்றும் சூரியசக்தி மூலமான தனித்துவமான மின்னுற்பத்தி நிலையமான தாத்ரி மின் ஆலை, மற்றும் நுண்மின்கட்டமைப்பு, மின்கல சேமிப்பு திறன் அமைப்பு, பசுமை ஐதரசன் முன்னோடித் திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்ட NTPCயின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமான NETRA ஆகிய இடங்களுக்கான கள விஜயங்கள் மூலம், இந்தியாவில் வளர்ந்து வருவதும் மற்றும் தற்போது நடைமுறையில் உள்ளதுமான மின்சக்தி தொழில்நுட்பங்கள் குறித்த அறிமுகத்தையும் இந்தத் திட்டம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

5. இந்தியா இலங்கை இடையிலான வலுச்சக்தி துறையில் இரு நாடுகளினதும் அரசாங்கங்கள் இடையிலானதும் நிறுவனங்கள் ரீதியானதுமான தொடர்புகளை வலுவாக்கல், தொழில்முறைத் திறன்களை வலுப்படுத்தல், அறிவுப் பரிமாற்றத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு இந்த திட்டமானது அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

******

கொழும்பு
26 மார்ச் 2026